உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 4. | பிங்களஹூ தைமீ -1918ஹூ ஜனவரிமீ | இதழ் 1

## விநாயகர் துதி.

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழலுறு மறவாம
லளியாறு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

---

## சிவஞானபோதம்.

### நான்காஞ் சூத்திரம்.

அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

அன்வயம்—ஆன்மா அந்தக்கரண மவற்றின் ஒன்றன்று. சகசமலத்து உணராது அமைச்சு அரசு எய்ப்ப அவை சந்தித்தது நின்று அஞ்சு அவத்தைத்து.

(இ-ள்.) ஆன்மா அந்தக்கரண மவற்றின் ஒன்று அன்று = ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கினுள் ஒன்றன்று. (ஆயினும்) - சகசமலத் துணராது = சகசமலத்தினால் உணர்வின்றி—அமைச்சு அரசு எய்ப்ப = மந்திரிமாரோடுகூடிய அரசனைப்போல்—அவை சந்தித்தது நின்று அஞ்சு அவத்தைத்து = அவ் வந்தக்கரணங்களோடு கூடிநின்று (சாக்கிரமுதலிய) ஐந்து அவத்தையுடைத்தாம். (எ-று.)

பிரமாணம் இலக்கணம் என்னும் இரண்டாலும் பதி பசு பாசங்களின் உண்மையைச் சாதிக்கவேண்டும் என்னும் முறைமையால், முதல் மூன்று சூத்திரங்களில், அனுமானப் பிரமாணத்தால்

முறையே பதியுண்மையையும், பாச உண்மையையும், பசு உண்மையையும் சாதித்து, அவற்றின் இலக்கணங் கூறத்தொடங்கி, மூன்றுஞ் சூத்திரத்தாற் சாதிக்கப்பெற்ற பசுவின் இலக்கணத்தை இச்சூத்திரத்திற் கூறுகின்றார்.

ஆன்மா அந்தக்கரணங்கள் நான்கினுள் ஒன்றன்றாயினும் சகசமலத்தால் தனக்கு நுண்ணுணர்வு இல்லாமையினால், அரசன் மந்திரிகளோடுகூடித் தன் தொழிலைச் செய்வதுபோல், துணையாகிய அக்கரணங்களோடு கூடிநின்று, சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளையுடையதாம். அவ்வாறு நின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக்குத் தடத்த இலக்கணமாம்.

“செம்பிற் களிம்புபோல் ஆணவம் ஆன்மாவைப் பற்றியிருத்தலால் அது சகசம் எனப்பட்டது” என்று சிவாகமம் கூறுகின்றது.

ஆன்மா என்னுஞ் சொல் வியாபகம் எனவும் சித்சித்து எனவும் பொருள்படும்.

### இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1-வது—(ஆன்மா) அந்தக்கரணமவற்றின் ஒன்றன்று.

2-வது—ஆன்மா சகசமலத்துணராது (அமைச்சர சேப்ப) அவை சந்தித்தது.

3-வது—(ஆன்மா) அமைச்சர சேப்ப நின்று அஞ்சவைத்தத்தே.

### இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1-வது—அந்தக்கரணங்களுக்கு உயிர் உட் கூடினாலன்றித் தொழிலில்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

2-வது—மலமறைப்பால் உயிர்க்கு அறிவில்லை.

3-வது—உயிர் மூன்றவத்தைப்படும்.

### இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது—ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது—அவை தாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

2-வது—இனி இவ்வான்மாச் சகசமலத்தினு லுணர்வின்றென் பது—அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

3-வது—இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுய் நிற்குமென்றது— அதுதான் மல சொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

---

இச்சூத்திரத்தின் உதாரண வெண்பாக்கள் ஏழு.

---

## முதல் அதிகரணம்.

ஆன்மா அந்தக்கரணமவற்றின் ஒன்றன்று.

(இ-ள்.) ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங் காரம், சித்தம் என்னும் நான்கினுள் ஒன்றன்று. (எ-று.)

இதில் 1-வது—தன்னுற் கூறப்படும்பொருள்—அந்தக்கரணங் களுக்கு வேருய் உயிருண்டு.

2-வது—ஐயப்பாடு—உயிர் அந்தக்கரணங்களேயோ, அவற் றின் வேருே?

3-வது—பிறர்கூறும் பக்கம்—முற்கூறியவாறு, தேகம், இந் திரியம் முதலியன வெல்லாம் வெவ்வேறு பெயர் பெற்றிருத்தலால் அவை உயிராகா. அந்தக்கரணமாகிய சிந்தையைச் சீவன் என் றும், சீவனைச் சிந்தையென்றும் வழங்கி வருதலால், அந்தக்கர ணங்கள் தனித்தனி ஆன்மாவாம். (இது அந்தக்கரணுன்மவாதி கள் பக்ஷம்.)

மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு— அந்தக்கரணங்களா னவை தம்மை நோக்கி அசித்தாகவும் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாகவும் இருக்கும். ஆன்மா அவ்வாறன்றித் தன்னை நோக்கியும் சித்தாயிருக்கும். ஆதலால் ஆன்மா என்பது அந்தக் கரணங்களாகிய மனேபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்றன்று. (இதனை இன்னும் விரித்துரைப்பாம்.) உயிரோடு கூடி ஐம்பொறிக ளறிந்த விடயங்களுள் ஒன்றை இதுயாது என சித்தம் சிந்தித்தறி யும். அச்சித்தம் தான் அவ்வாறு அறிந்ததை யறியமாட்டாது. மனமானது அவ்விடயத்தை இன்னதெனச் சங்கற்பிக்கும், அன்றி

யும், அது இன்னதாமோ அன்றோ வென விகற்பமுஞ் செய்யும்; அவ்வாறு தான் சங்கற்ப விகற்பம் செய்ததை யறியமாட்டாது. அகங்காரம் அவ்விடயத்தை யான் இன்னதெனத் துணிவேன் என்று ஒருப்பட்டு எழுந்து அறியும்; தான் ஒருப்பட்டெழுந்ததை யறியமாட்டாது. புத்தி அதனை இன்னது இது என நிச்சயித்தறி யும்; தான் நிச்சயித்ததை யறியாது. ஆனால் ஆன்மாவானது அவற்றோடு கூடி அது அதுவாயிருந்து, சிந்தித்தும், பற்றியும், எழுந் தும், நிச்சயித்தும் அறிவதோடு, தான் சிந்தித்ததையும், பற்றியதை யும், எழுந்திருந்ததையும், நிச்சயித்ததையும் அறியும். ஆதலால் தன்னை நோக்கியும் சித்துப்பொருளாயிருக்கும் ஆன்மா தன்னை நோக்கச் சித்துப்பொருளாகாத அந்தக்கரணங்களுக்கு வேறும்.

சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந் தக்கரணான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமூகான்மவாதி, என்னும் எண்மருள், அந்தக் கரணான்மவாதிகள் ஒழிந்த மற்றை எழுவரும் பிரமாண வியலா கய மூன்றாஞ் சூத்திரத்தில் மறுக்கப்பட்டு, இலக்கணவியலாகிய நாலாஞ் சூத்திரத்தில் அநுவாத முகத்தால் அந்தக்கரணான்மவாதி கள் மறுக்கப்பட்டனர்.

(இன்னும்வரும்.)

---

## மனோ நிக்ரஹ விளக்கம்.

பாழான என்மனங் குவியவொரு தந்திரம் பண்ணுவதுனக் கருமையோ
எனவும்

சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது ... எனவும்

உறவுடலை யெடுத்தவரிற் பிரமாதி யேனுமுனை யொழிந்து தள்ளற்
கறவுமரி தரிதன்றே இகபரமு முன்னையன்றி யாவதுண்டோ... எனவும்

சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெலாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே ... ... எனவும்

ஸ்ரீ தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின் றனர்.

அமிர்தபிந்தூப நிடதமும் :—

மனயேவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:
பந்தாய விஷயா ஸக்தம் முக்த்யை நிர்விஷயம் ஸ்ம்ருதம் ... எனவும்

அறுதியிட்டிருக்கின்றது.

இந்த உபநிடதத்தின் பொருளாவது மனமென்பதே மனிதர்களுக்குப் பந்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் காரணமாயுள்ளது. விஷயத்துடன் கலந்தால் பந்தத்துக்கும் விஷயத்துடன் கலவாதிருந்தால் மோக்ஷத்துக்கும் ஏதுவாகிறது என்பது பொருளாம்.

மனமானது அந்தக்கரணங்களுள் ஒன்று. ஆன்மா தன் இச்சா ஞானக் கிரியைகளைச் செலுத்துதற்கு இம்மனத்தையே முக்கிய கருவியாகக் கொண்டிருக்கின்றது. ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகள் புத்திதத்துவத்தை யடைந்து புறத்திலே செல்லும்போது மனமானது அவற்றால் ஏவப்பட்டுப் புறத்திலுள்ள ஞானேந்திரியங்களாலும் கர்மேந்திரியங்களாலும் முறையே வந்த அறிவையும் தொழிலையும் உள்நின்று வாங்கிப் புத்தியிற் சேர்க்கின்றது. பிறகு ஆன்மா அவற்றோடு தொடர்புபடுகின்றது. இதனை விரிக்கின் ஆன்மா ஞானேந்திரியங்களால் புறத்தேயுள்ள சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்களாகிய விஷயங்களை நுகர்தற்கும், கர்மேந்திரியங்களால் புறத்தேயுள்ள வசன, கமன, தான, விசர்க்க, ஆநந்தங்களைச் செய்தற்கும் மனமே பெருந் துணையா யிருக்கின்றது. (உதாரணமாக) கண்ணேந்திரியத்தினாலே காணப்பட்ட ஒருவிஷயம் ஆன்ம அறிவை யடையவேண்டுமானால் மனமே கண்ணினிடமாக அதனை வாங்கி உள்ளேகொண்டுபோய் புத்திதத்துவத்தில் சேர்க்கின்றது. புத்திதத்துவம் அதை வாங்கி ஆன்ம அறிவிற் புலப்படுத்துகின்றது. இவ்வாறே ஆன்மாவின் அறிவை வெளியில் விடுதற்கும் வெளியிலுள்ள விஷயங்களை ஆன்மாவின் அறிவிற் சேர்த்தற்கும் இடையில் நின்று துணைசெய்வது மனம் என்னும் அந்தக்கரணமேயாம். இம்மனத்தின் சம்பந்தம் இல்லாவிட்டால் ஆன்ம அறிவு உலகிலுள்ள விஷயங்களைக் கவரமாட்டாது. உலகிலுள்ள விஷயங்களும் தாமே ஆன்மாவை யடையமாட்டா. இதனாற்றான் மனத்திலே யாவும் தங்கியிருக்கிறதென்றும், மனமே பந்தத்துக்கும் மோட்சத்துக்கும் காரணமென்றும் வேதம் அறுதியிடாநின்றது.

மனமானது எக்காலத்தும் ஹிருதயத்தையே தனக்கு இருப்பிடமாகக்கொண்டு வாயுவைப்போல அசைந்துகொண்டிருக்கிறது. அதுவிஷயங்களைப் பொருந்தி நின்ற இச்சையையே தனக்கு வடிவமாகப்பெற்று வேண்டின தொன்றிலே சங்கற்பித்து நிற்கிறது. இந்திரியங்களைக் கலங்கச்செய்வதோடு விஷயங்களையுங் கெட்டியாகப் பற்றுகிறது. இதற்கு உள்ளும் புறமும் வடிவின்மையால்

ஆகாசத்தைப்போல ஜடரூபமாய் நிலைபெற்றிருக்குந் தன்மையைப் பெற்றுள்ளது. இத்தகைய மனம் இருவகைப்படும். உள்ளே சங்கற்ப விகற்பங்களைச் செய்வது ஒன்று. மற்றொன்று புறத்தே இந்திரியங்களுக்குப் புசிப்பைக்கொடுப்பது. அன்றியும் சுத்தமனம், அசுத்தமனம் என இருவிதப்படும். சுத்தமனம் புறத்தேயுள்ள விஷயங்களைப் பற்றுவதொழித்துத் தானே தனித்து நிற்பது. அசுத்தமனம் அவற்றோடு கூடிக் கலந்திருப்பது. இவ்வாறு தனித்து நிற்றற்கும், விஷயங்களோடு கலந்திருத்தற்கும் மனமே காரண மாதலால் மோட்சத்தை அபேக்ஷிக்கும் ஒவ்வொருவரும் தள்ளற் பாலதாகிய பந்த அறிவையும், கொள்ளற்பாலதாகிய மோட்ச ஞானத்தையும் பெறவேண்டியது அவசியமென்று ஏற்படுகின்றது. படவே, சுத்த அசுத்த மனங்களின் நிலைமைகளைத் தெரிந்துகொள் ளுதல் யார்க்கும் இன்றியமையாததாம்.

ஆன்மாவுக்குப் பந்தம் எப்படி உண்டாகிறதெனில் கூறுதும்:— மனமானது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரி யங்களை இயக்கி வியாபரிப்பதனால் புறத்தேயுள்ள பஞ்சபூதங்களின் குணங்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து விஷயங்கள் மனத்தின்வாயிலாக ஆன்மாவைப் பொருந்துதலும், புண்ணிய பாவ கர்மங்கள் ஆன்மாவை யடைதலுமாய் ஆன்மாவுக் குப் பந்தம் உண்டாகிறது. இந்த விஷயங்களை ஆன்மா விருப்பத் தோடு அனுபவிக்கும்போது அவை சுகமெனவும், வெறுப்போடு அனுபவிக்கும்போது அவை துக்கமெனவும் எண்ணப்படுகின்றன. இதனால் மனத்தின் சங்கற்ப விகற்பங்களே சுகதுக்கங்களுக்குக் காரணமாகின்றன. மேலும் மனமானது வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் ஆகிய கர்மேந்திரியங்களோடு சார்ந்து அவற்றை இயக்காதொழிந்தால் கர்மேந்திரியங்களின் தொழில்களாகிய வசன, கமன, தான, விசர்க்க, ஆநந்தம் என்பன ஒருபோதும் நிகழா. அவை நிகழாதபோது கர்மங்களைக் கர்மேந்திரியங்கள் செய்யவுமாட்டா. இதனால் மனத்தின் சங்கற்ப விகற்பங்களே இவற்றிற்குங் காரணமாகின்றன.

இப்படி மனமே புண்ணிய பாவங்களைச் செய்தற்கும், கர்மப் பயனாகிய இன்ப துன்பங்களை அநுபவித்தற்கும் காரணமாய் நிற் கின்றது. அதனால் இம்மனத்தின் கொடிய செயலைக் கண்டு அறி வுடையோர் அஞ்சி நடுங்குவர்.

ஸ்ரீ தாயுமான சுவாமிகளும்:—

பொன்னிலே பணிபோலும் மாயைதருமனமே யுன்புரைகள் தீர்ந்தாய்
என்னினோ யான்பிழைப்பேன் எனக்கினியா ருன்போல்வார் இல்லைஇல்லை
உன்னிலோ திருவருளுக் கொப்பாவாய் என்னுயிர்க்கோ ருறவுமாவாய்
எனவும்

வறிதிலுன்னை அசத்தென்னல் வழக்கன்று சத்தெனவும் வாழ்த்துவேன்
என்

சிறுமைகெடப் பெருமையினின் சென்மதேயத்தினிநீ செல்லல் வேண்டும்.
எனவும்

தீராத வென்சென்ன வழக்கெல்லாந் தீருமிந்தச் செனனத் தோடே
யாரேனும் அறிவரிய சீவன்முத்தி யுண்டாகும் ஐய வையோ
காரேனுங் கற்பகப்பூங் காவேனும் உனக்குவமை காட்டப் போமோ
பாராதி யாகவெழு மண்டலத்தில் நின்மகிமை பகர லாமோ. எனவும்

இரங்கிக்கூறித் தம் மனத்தை வசப்படுத்தினர்.

மனமானது ஒருகணமேனுஞ் சும்மாவிராது; விடயங்களைப் பற்றுதலும், சங்கற்ப விகற்பங்களைச் செய்தலுமாகவே இருக்கும்; மனத்தை அடக்கி நிறுத்துதல் மிக்க அரிதாகும்; பெருங்காற்றைத் தடுத்து நிறுத்துவது எப்படி அசாத்தியமோ அதுபோல தடுக்கக் கூடாததாய் தன்னிச்சையின்படி அலைந்து கொண்டிருக்கிற வாயுவின் அம்சமாகிய மனத்தை ஒருவழிப்படுத்தி நிறுத்துவது சாத்தியமான காரியமல்ல. மனம்போனபோக்கில் அறிவையும் விட்டுவிட நேர்ந்தால் மனம் அளவில்லாத இன்ப துன்ப போகங்களையும், புண்ணிய பாவ கர்மங்களையும் வாரிக்கொண்டு வந்து சேர்க்கும்; அவை யாவும் ஆன்மாவுக்குப் பந்தமே. மனம் புறத்தே வியாபரியாது உள்ளே அடங்கிச் செயலற்றிருந்தால் புறவிஷயங்களெல்லாம் மனத்தினாலே கிரகிக்கப்படா. அவை புத்திக்கும் விஷயமாகவும் மாட்டா. ஆன்ம அறிவும் அப்புத்தியைக் கவ்வவுமாட்டா. அப்பொழுது ஆன்மாவுக்குச் சுகதுக்க போகங்கள் நிகழா. புண்ணிய பாவங்களுஞ்சாரா. அதனால் பந்தம் உண்டாகக் காரணமும் இல்லை. மனத்தின் வியாபாரம் பிராணவாயுவினாலும், பிராணவாயுவின் இயக்கம் அகங்காரத்தினாலும் நிகழ்கின்றது. இதனை யோகிகள் நன்றாய் உணர்ந்தவர்களாதலால் அவர்கள் சாத்வீகம், இராசதம், தாமதம் என்னும் முக்குண விருத்திகளை யொழித்து, அகங்காரத்தை விட்டுப் பிராணவாயுவைத் தடுத்து மனத்தை அகத்தே நிறுத்திக் கொள்வார்கள். முக்குணங்களை யொழித்தால் அகங்காரம் சார

மாட்டாது. அகங்காரம் அடங்கினால் பிராணவாயு இயங்கமாட்டாது, பிராணவாயு இயங்காதொழிந்தால் மனம் செயலற்றுவிடும்; மனஞ் செயலற்றுவிட்டால் ஞானேந்திரியங்கள் சுகதுக்க விஷயங்களை ஏற்கா. கர்மேந்திரியங்கள் தொழில் செய்யா. அப்பொழுது ஆன்மாவின் அறிவு பந்தமற்று ஆநந்த மயமாயிருக்கும். அதுபற்றியே யோகிகள் யோகமுயற்சியினாலே மனோ நிக்ரஹஞ் செய்து பந்தமற்றவர்களாகின்றனர்.

இவ்வாறன்றி மனோ நிக்ரஹஞ் செய்ய இருவித கருவிகளுண்டு. அவை அப்பியாசமும் வைராக்கியமுமாம். அவற்றுள் அப்பியாசமாவது நித்திய நைமித்திக கர்மாநுஷ்டானங்களைத் தவறாது முடித்துக்கொண்டு தான்வழிபடுந் தேவதையினிடத்துச் சித்தத்தைத் திறம்பாமல் வைத்துத் தியானஞ்செய்ய மனத்தைப் பழக்குவது; வைராக்கியமாவது புறத்தேயுள்ள விஷயங்கள் தோஷமுடையன என்று அநுபவத்தாற்கண்டு அவைகளிடத்தில் அநிச்சைவைத்து அவற்றைவிட்டு விலக மனத்தைப் பழக்குவது;

மன்த்தின் விருத்திகள் எதுவரையிலும் ஹிருதயத்தில் குவிந்து க்ஷயமாகுமோ அதுவரையிலும் அம்மனத்தைத் தடுக்கவேண்டும். அதுவே ஞானமுந் தியானமுமாம். அது க்ஷயமடையுங்கால் ஹிருதயத்திலுள்ள புரீததி: என்னும் நாடியில் பிரவேசிக்கும்; அங்ஙனம் பிரவேசிக்கவே விஷயவாசனைகளைக் கொண்டுவந்து உதவும் நாடிகளின் சம்பந்தம் அங்கு இன்மையால் சங்கற்பத்தையே தனக்குச் சொரூபமாகக் கொண்ட மனம் எரிகரும்பற்ற தீயைப்போலத் தானே தொலைந்துபோகும். இதுவே மனோலயமாகும். இது உழைப்பால் வருவதன்றிச் சொல்மாத்திரமாய் வருவதன்று.

சகலசம்ப்யாதீத சுத்தாத்வைத சித்தாந்த சைவர்கள் மனோ நிக்ரஹஞ் செய்யும் ஞானமார்க்க முயற்சி யோகிகள் செய்யும் மனோலய முயற்சியைப்போல் அவ்வளவு அரிதன்று. அது எளிதில் கைகூடுவது. எவ்வாறெனில் சுத்தாத்வைத சித்தாந்த சைவர்கள் முக்குணங்களையும் அந்தக்கரணங்களையும் இந்திரியங்களையும் பிராணவாயுவையும் பொருட்படுத்தி அவற்றை அடக்கி யொடுக்க ஒருபோதும் நினையார். எல்லாத் தத்துவங்களையும் தம்மின் வேறெனக்கண்டு, எல்லாவியாபாரங்களும் மனத்தால் வருவனவென்று உணர்ந்து தத்துவங்களோடும் மனத்தோடும் சாராமல் விருப்பு வெறுப்பு அற்று சும்மா இருந்துவிடுவார்கள். அதாவது மனத்தை

ஒடுக்குவதில் முயற்சி செய்யாமல், அறிவை பகிர்முகப்படுத்தாது உள்ளொடுக்கி, அருளில் நிறுத்தி ஆநந்தத்தில் அழுந்தி அறிவுஞ் செயலுமற்று அசைவின்றி இருந்துவிடுவார்கள். அப்பொழுது ஆன்மா எங்கும் நிறைந்த சிவத்தில் வேறற நின்று, சிவமென்றுந் தானென்றும் பகுத்துணராமல் சிவமேயாய்த் தெவிட்டாத தெள்ளமுதமாகிய சிவானந்தத்தையுண்டு நித்தியமான பேரின்பந் துய்க்கும். இத்தகைய மனோ நிக்ரஹநிலையே உண்மை நிலையாம். இதனை அடியில் காட்டிய ஸ்ரீ தாயுமான சுவாமிகள் திருப்பாசுரத்தால் உய்த்துணர்க.

> எனதென்பதும்பொய் யானெனல்பொய்
> எல்லாமிறந்த இடங்காட்டும்,
> நினதென்பதும்பொய் நீயெனல்பொய்
> நிற்குநிலைக்கே நேசித்தேன்
> மனதென்பதுமோ என்வசமாய்
> வாராதைய நின்னருளோ
> தனதென்பதற்கும் இடங்காணேன்
> தமியேன் எவ்வாறுய்வேனே.

சுபம். மெய்கண்டநாதன் துணை.

சோளங்கிபுரம் - சிவஅருணகிரி முதலியார்.

---

ஏகான்மவாத பாவலரின்,

## இழுக்குரை மறுப்பு.

ஐயன்மீர்,

சின்னாள் முன்னர் வடமொழிச் சிவஞானபோதத்திற்குத் தஞ்சை ஸ்ரீமான் வெ. குப்புசாமிராஜு அவர்கள் உரையொன்றெழுதி, அதனைத் "தத்துவப்பிரகாசிகை" என்னும் பெயரால் வெளிப்படுத்தியுள்ளார்கள். அது அந்நூலோடு முற்றிலும் மாறுபட்ட உரையாயிருத்தல் கண்டு அம்மாறுபாடனைத்தையும் விளக்கப்புகுவது, மணற்சோற்றில் கல்லாராயப் புகுவதோடொக்குமெனக் கருதித் தாலிபுலாக (ஒரு பானைசோற்றிற்கு ஒரு சோறு பதம்பார்க்கும்) நியாயமாய், அவற்றுள் ஓர் விஷயத்தை எடுத்தாண்டு அதிலுள்ள மாறுபாட்டை "வடமொழிச் சிவஞானபோதமும் ஸ்ரீமான் வெ. குப்புசாமிராஜு அவர்கள் மாறுபட்ட உரையும்" எனப் பெயரிய சிறு பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தியிருந்தேம். அது பின்னர் சைவ சித்தாந்த மகாசமாஜத்தினின்

றும் வெளியான சித்தாந்தம் 1917-ம் ஆல 5-வது சஞ்சிகையிலும் வெளிப்பட்டுள்ளது. இவ்வாறு வெளிப்பட்ட பத்திரிகையினைக் காய்தலுவத்தலகற்றி ஆராய்ச்சி செய்த அறிஞரெல்லாம் ராஜ அவர்கள், பிரபலப்பிரமாண சாஸ்திரமான சிவஞானபோதத்திற்கு இவ்வாறாக வெல்லாம் மாறுபட்ட உரையெழுதி வெளியிடப் புகுந்தது, இதுகொண்டு சுருதி யுக்தி அனுபவ விருத்தமான தமது ஏகான்மவாதக் கொள்கைக்கும் பிரபலச் சுருதிப்பிரமாணம் உண்டென நாட்டிக்கொள்ளவே போலுமென எள்ளிநகையாடா நிற்பவும், சென்னை தே. கிருஷ்ணசாமி பாவலர் என்பாரொருவர் இம் மாறுபட்ட உரையை மாறுபடா உரையென நாட்டுவார்போன்று வெளிவந்ததும், அதில் இவ் வுரையை வைதிக சைவரெல்லாம் கொண்டாடுவதாய்க் கூறியதும் வியப்பினும் வியப்பே. இது நிற்க; இனி விவாதவிஷயம் வருமாறு:—

## ஐந்தாவது சூத்திரம்.

> விதர்த்யக்ஷாணி பும்ஸார்த்தார்நஸ்வயம் ஸோபி சம்புநா ।
> தத்விகாரீ சிவச்சேந்ந காந்தோ யோவத்ஸதம் நயேத் ॥

இதற்கு ராஜ அவர்கள் கூறிய அவதாரிகை முதலியன வருமாறு:—

அவதாரிகை.—“இனி அவ்வாத்மா அறிதலும் சுதந்தரமாயின்றிச் சிவனாலேயறியுமென்பதனைக் கூறுகின்றார்.”

பதவுரை.—“அக்ஷாணி அர்த்தான் பும்ஸா விதந்தி - இந்திரியங்கள் விஷயங்களைப் புருஷனையஜீவனாலறிகின்றன, ஸ: அபி - அச்சீவனும், ஸ்வயம்ந - தானே அறிகிறதில்லை, ஸம்புநா - சம்புவினால், நயேத் - அறிகின்றான்” (என்பது முதலியன).

## விசேட உரை.

“இதனால், இந்திரியவாயிலாகப் புருஷன் அறிவதுபோலச் சீவன்வாயிலாகச் சிவனே அறிகின்றான். சீவனுக்குச் சுதந்தரமான அறிவில்லை யென்பது பெறப்பட்டது. அது சூரியன் நேரே பிரகாசிக்கற்கேதுவாகாத இருட்டறையிலுள்ள பதார்த்தத்தினை ஒரு கண்ணாடியினது சாயாப் பிரகாசவாயிலாக விளக்குவதுபோலச் சிவன் அவித்தையினால் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை அந்தக்கரண பிரதிபிம்ப சிதாபாஸ வறிவாகிய ஜீவாத்மாவின் வாயிலாக அறிவன் என்பதனால் பொருந்துமாறு காண்க.”

## எமது ஆக்ஷேபம்.

ஈண்டு இவ்விசேட உரையில் இந்திரியவாயிலாகப் புருடன் அறிவதுபோல் சீவன்வாயிலாகச் சிவனே அறிகின்றான் என்கின்

ருர்களே. இது 'அவ்வாத்மா அறிதலும் சுவதந்தரமாயின்றிச் சிவ ஞலே அறியும்' என்ற அவதாரிகை உரைக்கும் 'அச்சீவனும் தானே அறிகிறதில்லை; சம்புவினுல் அறிகின்ருன்.' என்ற சூத்திர உரைக்கும் மாறுபட்ட உரையேயாமன்ருே! யாதிணுலெனின்; அவதாரிகையும் சூத்திரமும் சிவஞலே சீவன் அறியுமெனக் கூற, விசேட உரை சீவஞலே சிவன் அறிவன் எனக் கூறுதலிஞலென்க.

## இதற்குப் பாவலர் கூறிய சமாதானம்

"இவர் சிவஞானபோதம் 11-வது சூத்திரம் "ஏகமாய் நின்றே" என்னும் வெண்பாவினுரையில் சிவஞான சுவாமிகள் "கண் கண்ணுடியினின்றுந் தன்னை விடயித்தாற்போல முதல்வன் ஆன்மாவுடனின்று தன்னை விடயித்தல் பொருத்தமுடைமையின், ஆன்மாச்சிரயமென்னுங் குற்றம் இன்னேரன்னவற்றிற் கெய்தா தென்றுணர்க. கண்ணுடிக் குள்ளாகத் தோன்றுவது போலும் எதிர்விம்பமாவதுவிம்பமேயன்றி வேறன்றென்பது சிவாகம நூற் றுணிபென்க" என்றெழுதியிருத்தலையும், இதன்கீழெழுதியிருத்தலையும் படித்துணர்ந்திருப்பாராயின், குப்புசாமி ராஜா அவர்கள் எழுதிய உரையைத் தவறென்று கூற முன்வரமாட்டார். சாஸ்திர ஆராய்ச்சி செய்யாமலே ஒரு நல்லுரையைப் பழிப்பது கற்ருர்க்கழகன்ரும்" என்பதே.

இவ்வாறு பாவலர் எமது ஆக்ஷேபத்துக்குக் கூறிய சமாதானம் எட்டுணைத்தாயினும் பொருந்துமா? பொருந்தாதென்பதே தேற்றம். எங்ஙனமெனில் ராஜா அவர்கள் 5-ம் சூத்திர அவதாரிகையிலும், பதஉரையிலும் சிவஞலே சீவன் அறிவன் எனக் கூறிவிட்டு, விசேடஉரையில் சீவஞலே சிவன் அறிவனெனக் கூறியதையே யாம் மாறுபட்ட உரையென விளக்கியிருப்ப, இதற்குச் சமாதானம் கூறவந்த பாவலர் அவ்வவதாரிகைப் பொருளோடும் பதவுரைப் பொருளோடும் விசேட உரைப் பொருள் மாறுபடவில்லை என்பதை நியாயவாயிலாக நாட்டித் தாம் சூட்டிக்கொண்ட பாவலர்ப் பட்டத்தோடு உரைவலார்ப் பட்டத்தையும் சூட்டிக்கொள்ளாமல் வாதத்தைவிட்டுப் பிறிதொன்றினைச் சொல்லிப் பொழுது போக்கல் என்னும் தோல்வித்தானப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டமையாலென்க. இனி இப்பட்டம் சூட்டிக்கொள்வதற்காகவோ விவாத விஷயத்துக்கு எட்டுணையும் பொருந்தாத "ஏகமாய்...... ......" என்னும் வெண்பா உரையின் ஓர் சிறு பாகத்தை எடுத்

தாண்டவர் அம்மட்டில் நின்றுவிடாது, "இவ்வுரையைப் படித்துப்பார்த்திருந்தால் ராஜு அவர்கள் உரையைத் தவறென்று கூற முன்வரமாட்டார்" எனக் கூறுமுகத்தானே அதனைப் படித்துப் பார்க்கும்படி எமக்கோர் உபதேசமும் செய்கின்றார். எமது பூர்வபுண்ணியம் இவர் உபதேசங் கேட்டுப் படிக்குவ்படி இதுகாறும் எம்மை விட்டுவையாது பல்லாண்டுகட்கு முன்னரே பக்குவப்பட்டுப், பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தையும் அதற்கு,

"சங்கரர் ராமானுஜர் மத்துவர் பாடியங்களெலாந் தத்தளிக்கத்
தங்கிய கேவலவிசிஷ்ட மறுதலை யத்துவிதந்தந் தலைகவிழ்க்கத்
துங்கமுறு சிவஞானபோத விருதயத்துண்மை சூழ்ந்ததற்கு
மங்கள சுத்தாத்துவித் திராவிடமாபாடியத்தை வரைந்து வைத்தான்"

எனக்கொண்டாடப்பெற்ற மாதவச் சிவஞானசுவாமிகள் இயற்றிய பேருரை சிற்றுரையினையும் பார்த்தும் கேட்டும் படித்துணர்ந்துய்யு நெறியில் செலுத்திவிட்டமையின் இவருடைய உபதேசம் எமக்கணுத்துணையும் வேண்டற்பாலதன்றாம்.

இனி இவ்வுபதேசத்தை, அதாவது "ஒரும் வேதாந்தத் துச்சியிற் பழுத்த ஆராவின்ப வருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத்" தேனமுதினைச் செவ்வனே ஊட்டவல்ல சிவஞான சுவாமிகள் இயற்றிய சிவஞானபோத உண்மை உரையைக் கைக்கொள்ளுமாறும், ராஜு அவர்கள் செய்த வடமொழிச் சிவஞான போத மாறுபட்ட உரையைக் கைவிடுமாறும், தமதேகான்மவாதக் கூட்டத்தார்க்கு உபதேசம் செய்யப் புகுவாரேல் அது பயனுடைப் புண்ணியச் செயலாய் முடியுமெனத் தெளிவாராக.

இனி, இவரெடுத்தாண்ட சிவஞானசுவாமிகள் உரைப்பொருளை விவாத விஷயமாய் விளக்கவேண்டிய அவசியம் சிறிதுமின்றாயினும், இவரது படாடோப வார்த்தையைக் கண்டு ஏகதேசிகள் மயங்காதிருத்தற்பொருட்டுச் சிறிது விளக்குவாம். இவர் ராஜு அவர்கள் உரைக்கு சாதகமாமெனக் கண்டுபிடித்த வாக்கியமாவது "கண் கண்ணடியினின்றும் தன்னை விடயித்தற்போல முதல்வன் ஆன்மாவுடனின்று தன்னை விடயித்தல் பொருத்தமுடைமையின் ஆன்மாச்ரயமென்னும் குற்றம் இன்னோரன்னவற்றிற்கு எய்தாதென்றுணர்க" என்பதே. ஏனைய, இதன் பொருளை வலியுறுத்த எழுந்தனவேயாம். ஆகவே இவ்வாக்கியப் பொருளை விளக்குவதே

ஈண்டு வேண்டற்பாலது. இனி இவ்வாக்கியமோ முதல்வன் உயிர்க்குக் காட்டும் உபகாரம் உடையனுயிருத்தலேயன்றி உடனின்று காணும் உபகாரமும் உடையனுயிருக்கின்றான் என மேல்வாக்கியங்களால் சாதித்த வழி, இது பெத்த நிலைக்கட் பெறப்படுவதாகிய ஐம்புல விடையானுபவத்திற்குப் பொருந்துவதாயினும் முத்தி நிலைக்கட் பெறப்படுவதாகிய சிவானுபவத்திற்குப் பொருந்துமா? பொருந்துமாயின், ஆண்டுச் சிவம் தன்னைத்தானும் அனுபவித்தல் பெறப்பட்டுத் தன்னைப்பற்றுதலென்னுங் குற்றம் எய்துமே யென வாதிப்பாரை நோக்கி, அக்குற்றம் எய்தாமையினை விளக்கவந்ததே யாம். இதனால் இவ்வாக்கியமும் முன்பின்னுள்ள ஏனைய வாக்கியங்கள்போலப் பெத்தம் முத்தி இரண்டினும் சிவத்துக்கு முதன்மைத் தன்மையும், ஆன்மாவுக்கு அடிமைத் தன்மையும் சாதித்ததேயன்றி ராஜ ஸ்ரீ அவர்கள் கூறிய விசேட உரைபோல சிவனுக்கு முதன்மைத்தன்மையும் சிவனுக்கு அடிமைத் தன்மையும் சாதிக்கவில்லையே. இங்ஙனமாகவும் பாவலர் ஏகமா யென்னும் வெண்பாவினுரையை எடுத்தாண்டதென்னை? ராஜ ஸ்ரீ அவர்கள் உரையில் கண்ணாடி உவமை காணப்படுவதுபோல் சுவாமிகள் உரையினும் கண்ணாடி உவமை காணப்படுதல் பற்றியா? அங்ஙனமாயின் ஈதென்ன அறியாமை! இருவர் கூறும் உவமையும் சாதிக்கும் பொருள் வேற்றுமை உணரவேண்டாமா? இங்ஙனம் பலபடித்தானும் விவாத விஷயம் அறியாதவராகிய இவர் எமது விஷயத்தில் சிலவற்றை விவாதத்திற்குச் சம்பந்தமில்லாததெனை விலக்கியது வியப்பினும் வியப்பே. என்னை? விவாதவிஷயமே அறியாத இவர்க்கு விவாதத்திற்கு சம்பந்தமில்லாத விஷயமும் அறிதல் கூடாதாகலின். இனி இவர் வெளியிட்ட மறுப்புப் பத்திரிகையிற் கண்டுள்ள ஏனைய விஷயங்களில் சில விவாதத்திற்கு சம்பந்தமில்லாததும் சில ஸ்ரீமான் வீ. க. பாண்டிப்பெருமாள் பிள்ளையவர்கள் மறுக்கவேண்டியதுமாய் இருத்தலின் யாம் அவற்றில் தலையிடவில்லை எனத் தெளிக.

இங்ஙனம்:

தே. ச. சு. சுப்பிரமணிய பிள்ளை,

காரியதரிசி,

சைவசித்தாந்தசபை, தூத்துக்குடி.

## சைவப் பத்திரிகாசிரியர் சரித்திரச்சுருக்கம்.

(மூன்றும் மலர். 183 - வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீமான் ஜெ. யெம். நல்லசாமிபிள்ளையவர்கள் கொங்கு நாட்டுத் தலயாத்திரையில் இத்திருக்கூட்டத்திற்குச் செய்த பேருபகாரங்கள் மிகவும் பாராட்டற்பாலனவாம். அவர் உடனிருந்து திருச்செங்கோடு முதலிய தலங்கட்கு யாத்திரைசெய்வித்துச் சிறப்பித்ததுமன்றி, சபாமண்டபத்தின் பொருட்டுப் பல தனவான்களிடம் மெய்வருத்தம் பாராது அழைத்துச்சென்று பொருள்சேகரித்துக் கொடுத்தும் உதவிபுரிந்தனர். இந்த யாத்திரைக்கு ஸ்ரீலஸ்ரீ ம. தி. பாநுகவி சுவாமிகள் விஜயஞ்செய்து தலங்கடோறும் சைவப் பிரசங்க மாரிபொழிந்தனர். இவர்கள் யாவரும் செய்த உபகாரங்களால் பத்திரிகாசிரியர் தாம் கல்கத்தாவிலிருந்து பெற்றுக்கொண்டு வந்த விடுமுறை கழியுமுன் சபாமண்டபத்தைக் கட்டிமுடித்து, 1905ஸு மேமீ 25உ அடியார் குழாம் திருமறைக்காட்டுக் கதவந் திறந்த திருப்பதிகம் ஓதவும், ஸ்ரீமான் ஜெ. யெம். நல்லசாமி பிள்ளையவர்கள் பொற்றிறவுகோலால் கதவு திறக்கவும், ஸ்ரீலஸ்ரீ ம. தி. பாநுகவி சுவாமிகள் முதலிய வித்வசிரோமணிகள் பிரசங்கமாரி பொழியவும், சர்வாடம்பரமாக சபாமண்டபப் பிரவேச மகோற்சவம் கொண்டாடி உடனே மீண்டும் கல்கத்தாவுக்கேகினர்.

இவர் சபாமண்டபம்கட்டத் தொடங்கியபோது பெங்களூரில் வசித்திருந்த பெருங்கொடையாளியாகிய ஸ்ரீமான் ஆற்காடு மெய்கண்டதேவ முதலியாரவர்கள் திருக்கூட்டத்தின் பெருமையையை யறிந்து, திருக்கழுக்குன்றத் தலயாத்திரையில் இவர்களைச் சந்தித்து உடனிருந்து சிவாலயவழிபாடாதிகள் செய்து இத்திருக்கூட்டத்தினிடம் பேரன்புபூண்டு, இவர்கள் கட்டத் தொடங்கிய சபாமண்டபத்திற்கு 250 ரூபா உதவியதுமன்றி, இவர்கள் சபாமண்டபப்பிரவேசம் செய்யப்போவதை யறிந்து தாமே 25 ரூபா அனுப்பி சபாமண்டபப் பிரவேச மகோற்சவத்தை மிகச் சிறப்பாய்க் கொண்டாடுவித்தனர்.

பத்திரிகாசிரியர் கல்கட்டாவிற்குச் செல்ல விருந்தபோது, 1905௵ மார்ச்சு௴ 19௳ சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் மகாஜனக்கூட்டம் கூட்டி அச்சிட்டு வெளியிட்டு வாழ்த்திய

## வாழ்த்து மஞ்சரி.

கடல்புடை யுடுத்த நெடுநில வரைப்பிற் கண்ணுத லடியவர் கூட்ட [தந்
மடல்விடை யுகைத்த கடவுடன் னிடங்க ளடைந்தடைந் தருந்தமிழ் வே
தடைகெட வுரைத்துப் பணிதிற மமைத்த சத்துவ வுத்தம சுகுண
மடலுடைக் குவளை யாதிமூ லாநின் மாபுக ழோங்குக மலிந்தே. ௧

சீருறு மிருக்கத் தண்ணலே நினது சிந்தையின் வலியினு லன்றே
ஏருறு தமிழின் வேதநல் லடியா ரிருங்கட லுடுத்த பாரதனில்
நாருறு திறமாய்ப் பயின்றன ராதி மூலநற் பெயருறு நண்ப
பாருறு நினது புகழ்ச்செய லறம்போற் படர்ந்தினி தோங்குக மலிந்தே. ௨

ஐந்துறழ் முப்பான் சிவத்தல மணைந்தெம் மண்ணலை யடியவ ரொருங்கே
வந்தனை புரியுஞ் செயலினுக் காக வைத்தநின் முயற்சிகண் மறவேஞ்
சுந்தர சுகுண வாதிமூ லப்பேர்த் தோன்ற னீயார்ந்த தொல்புகழ்கள்
பந்தணி விரலா ளறமென நாளும் படர்ந்தினி தோங்குக மலிந்தே. ௩

தாமரை யணிந்த புயமிரண் டுடைய சம்பந்த ஞதிய ரளித்த
மாமறைப் பொருளார் தமிழ்மறை யுலகோர் மாண்புடன் பயிலுமா செய்த
கோமக னெவனோ வீதிமூ லப்பேர்க் கொண்டநின் றனையன் றிக்குறிக்கின்
மாமிகு னினது புகழ்மறை யெனவே மாண்புட னோங்குக மலிந்தே. ௪

தூமதி யணிந்த சுருதிநா யகனைத் தொழுந்திற முடையவர் குழுமி
நேமமிக் கவராய்ப் பலதளி புகுந்து நெருங்கிநின் றேத்திடு திறஞ்செய்
தேமலி குவளைத் தாரணி யாதி மூலநின் சீர்ப்புகழ் நாளு
மாமறை யுரைத்த வறமென விளங்கி மாண்புட னோங்குக மலிந்தே. ௫

அளவில்சீர்ச் சென்னைச் சிவனடி யவர்க ளார்சபா மண்டப மதனை
வளமுற வமைத்த நினதுசீர்க் கம்ம வையகத் தெவரிணை யுறுவோர்
அளகையா னெனவெம் மிறைவனுக் குரிய வாதிமூ லப்பெய ரண்ணல்
பளகறு நினது தவப்புக ழறம்போற் பரந்தினி தோங்குக மலிந்தே. ௬

சூலிகை யழலிற் றூய்மையார் குணத்துத் துறவினர் புகழ்மனை யறத்தோய்
மாலிகை குவளை யாவுடை யாதி மூலநல் லரனடி யவர்கள்
பாலிகை யுடன்வந் தெதிர்கொளப் புரிந்த பகருந் தவப்புக ழனைத்துஞ்
சாலிகை மறுவா வுடையவர் புரிந்த தவமென வோங்குக தழைத்தே. ௭

நின்குல முதல்வ ருபேந்திர னடிக ணிணைதரு தவமத ஞனீ
அன்புடை யன்னோர் வழிபடு மாதி மூலநற் பெயருட னடைந்திம்
மன்பதை சைவ மணம்பெறப் புரிந்த மாக்ஷிமை யுறுதவப் புகழ்கள்
இன்புறு குடிலை மறைப்பொரு ளென்ன விணையின்றி விளங்குக விசைந்தே

சித்தர்கள் முதலர் யுறுந்தவர் புகழுஞ் சென்னையம் பதியுறு நினது
புத்தியை யிடமாக் கொடுவெளிப் போந்த புகழடி யவர்திருக் கூட்ட
மித்தரை முழுதும் பரவிமே லோங்கி யெண்ணறு கிளைகளா யிலங்க
வுத்தம வாதி மூலவெந் நாளு மோங்குமெம் மிறையென வுயர்ந்தே. கூ

சைவமந் திரமுந் தமிழ்த்திரு மறையுஞ் சங்கர னடியவர் குழுவுந்
தெய்வ சன்னிதியுந் திகழிரு சுடருந் திருந்தொளி யுறுநுத லவனு
மைவரு முற்மா பூதமு மென்ன வாதிமூ லப்பெய ரண்ணல்
செய்தவப்புகழ்கள் குறுமுனி கரம்போற் சிறந்தினி தோங்குக செழித்தே

எம்மையா ளுடைய சங்கரி கரத்தி லிருந்தவ தரித்தநற் கங்கை
சும்மையோ டலவு கல்கட்டா நகர்க்குத் துரைத்தன முறையினாற் புகுநீ
செம்மையோ டுயர்ந்த திருவுடன் விரைந்து சென்னையி லுறமதி யணிந்தார்
தம்மையே நினைக்கு மெம்மனோர் நினைவைத் தருமிறை தனித்திரு வுளமே.

பத்திரிகாசிரியர் கல்கட்டாவுக்குச் சென்றபோது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் மிகவும் உன்னதமான நிலையிலிருந்தது. இச்சபையின் வருகையைப் பலரும் பெருங்காதலோடு எதிர்பார்ப்பவர்களாயிருந்தார்கள். இவருக்குப் பதிலாக ம-ா-ா-ஸ்ரீ ஈக்காடு-இராஜரத்தின முதலியார் என்பவரும், ம-ா-ா-ஸ்ரீ அணவை, கோ. சண்முகமுதலியார் என்பவரும் காரியதரிசிகளாக நியமிக்கப் பெற்றனர். இவர்களோடு பத்துப்பேர் அத்தியட்சர்களாயிருந் தார்கள். பத்திரிகாசிரியர் கல்கட்டாவிலிருந்து அடிக்கடி பொரு ளுதவி செய்துகொண்டிருந்தனர். இவ்வாறிருந்தும் இச்சபை நாளுக்குநாள் பொலிவழியத் தலைப்பட்டது. இராஜரத்தினமுதலி யார் வயோதிகத்தாலும் வியாதியாலும் வருந்திக்கொண்டிருந்து சிவபதமடைந்தனர். இச்சபையினிடத்தில் மெய்யன்பு வைத்திருந்த ஸ்ரீமான் மா. சுப்புராயப்பிள்ளை முதலிய பெரியோர்கள் சிலரும் சிவ பதமடைந்தார்கள். ஷை அணவை சண்முகமுதலியார் சுயநலம் பாராட்டத் தலைப்பட்டனர். அங்கத்தினர்களும் அபிமானிகளும் பலர் சபையினின்றும் நீங்கிவிட்டார்கள். இவைகளை யறிந்த சிலர் சபையை யழித்துவிட்டுச் சபாமண்டபத்தைக் கைப்பற்ற முயன் றார்கள். அவர்களோடு இச்சபையின் அத்தியட்சர்களுள் ஒருவரா யிருந்த ம-ா-ா-ஸ்ரீ காட்டூர் வெட்கடாசலமுதலியார் என்பவரும் சேர்ந்து உபத்திரவம் செய்யத் தொடங்கிவிட்டார். பத்திரிகா சிரியர் சென்னையைவிட்டு நீங்கின நான்கு வருடங்களுக்குள் இச் சபை நிலை குலைந்து அழிந்துவிடுவதா யிருந்தது. சென்னையில் சைவாபிமானிகள் என்று வெளிவருவோர் பலிருந்தும் ஒருவரா

வது சபையை நிலைநிறுத்தி நடத்த முன்வரவில்லை. இதனைப் பத்திரிகாசிரியர் அறிந்து 27 மாதங்களுக்கு விடுமுறை பெற்றுக் கொண்டு மீண்டும் சென்னைக்கு வந்தனர். இவர் அவ்வாறு வந்த போது இவருக்கு 180 ரூபா மாதச் சம்பளமாயிருந்தது. இவர் இதுவரையில் உத்தியோகத்திலிருந்தால் 300 அல்லது 400 சம்பளத்தில் இருக்கலாம். அவ்வாறிருந்தும் இவர் மூன்றிலொருபங்கு (60 ரூபா பென்ஷன்) உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு உத்தியோகத்தை நிவர்த்தி செய்துகொண்டு சென்னைவாசிகளிடம் போராடிச் சபையை நிலை நிறுத்தித் தம்மாலியன்ற வழிகளிலெல்லாம் சைவசமய பரிபாலனம் பண்ணத்தொடங்கினர்.

அச்சமயத்தில் மிகவும் அக்கிரமமாய் இச்சபையை யழித்துச் சபாமண்டபத்தைப் பிறர் வசமாக்க முயன்று இவரைத் தாக்கி மனம் நோவச்செய்த சிலர் இப்போது நோய் முதலியவற்றால் மிக வருந்துவதைப் பார்க்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது.

பத்திரிகாசிரியர் திரும்பிச் சென்னைக்கு வந்தபோது முன்போல் திருக்கூட்டம் என்னும் பேரை வகித்துச் சிவதல யாத்திரை செய்தற்கு அருகராவாரைக் காண்பதரிதாயிருந்தது. ஆதலால் இவர் பெருஞ் செலவிட்டும் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டும் ஹைகோர்ட்டில் வியாச்சியம் செய்து எதிரிகளை ஜெயித்துச் சபா மண்டபத்தைக் காப்பாற்றி சிவதல யாத்திரைகள் செய்வதைச் சுருக்கிச் சபையைப் பலப்படுத்தி நிரந்தரமானவும் சைவசமயப் பாதுகாப்புக்கு இன்றியமையாதனவுமான காரியங்களைச் செய்யத் தொடங்கி, சபையை அரசாங்கத்து 1860-வது வருடத்து 21-வது சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்வித்தனர்.

அதன்பின், சென்னையில் "அஷ்டாவதானம், சித்தாந்த சரபம், யதீந்திரசுவாமிகள்" என்னும்பட்டங்களை வைத்திருக்கும் ம-ா-ா-ஸ்ரீ பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்களை இச்சபைக்கு அக்கிராசனராக வைத்து, The Saivite Elementary School என்னும் சைவபாடசாலையைத் தாபித்து நடத்தி வருவாராயினர். நடத்தி வந்தபோது, முற்குறித்த அணைவை சண்முக முதலியார் முதலிய சிலர் இப்பாடசாலையை யெடுத்து விட்டு முன்போல்யாத்திரை செய்யவேண்டுமென்று கலகஞ்செய்து தங்கள் கருத்துமுற்றாமையால் இதினின்றும் பிரிந்து சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கம் என்னும் ஒருசபை வைத்துக்கொண்டார்கள் அவர்களோடு

ஷை ம-ா-ா-ஸ்ரீ பூவை கலியாணசுந்தர முதலியாரும் சேர்ந்து கொண்டு பாடசாலைவேண்டாமென்று சொல்லி, இச்சபையைவிட்டு நீங்கி அத் தலயாத்திரைச் சங்கத்திற்குத் தலைவராயினர். அச்சமயத்தில் ஷை பாடசாலை வைக்கப்பட்டிருந்த வீட்டுக்குடையவர்கள் அவ்வீட்டை மூன்று மாதங்களுக்குள் காலிசெய்துகொடுக்கும்படி எழுதித் தெரிவித்தார்கள். இவ்வாறு பத்திரிகாசிரியரின் நன் முயற்சிகளுக்கு இடையூறுகள் மேலு மேலும் உண்டாயின. பாடசாலைக்கு வேறு தகுந்த இடம் கிடைக்கவில்லை. ஆதலால் இவர் மாதம் ஒன்றுக்குமூன்று ரூபா வீதமாக வாடகைகொடுத்து ஒரு காலி நிலத்தை முப்பது வருட வாடகைக்கு வாங்கி சுமார் 1600 ரூபாவரையில் செலவிட்டு மூன்று மாதங்களுக்குள் பாடசாலைக்கென ஒரு கட்டடம் கட்டி அக்கட்டடத்தில் ஷை பாடசாலையை வைத்து நடத்திவருவாராயினர். அப்போது இப்பாடசாலையில் ஒரு உபாத்தியாயரே யிருந்தார். இப்போது இது மிகவும் விருத்தியடைந்து மூன்று உபாத்தியாயர்களுடையதாய் அரசாங்கத்தின் உதவியைப்பெற்று பிரசித்தி பெற்று நிலவுகிறது. Messrs. Best & Co., துவிபாஷிகர் ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல் செட்டியார் அவர்கள் இவர் கட்டிய கட்டடத்தை விலை கொடுத்து வாங்கி இப் பாடசாலைக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இவர் கல்கட்டாவிலிருந்தபோது சைவசித்தாந்த மகாசமாஜம் தோன்றி வருடாந்தக் கூட்டம் கூடுவதை யறிந்து, ம-ா-ா-ஸ்ரீ ஜெ. யம். நல்லசாமி பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதி, சமாஜம் நாடகசாலைகளைப்போல் வெறும் பிரசங்கத்தினளவா யிருப்பதில் பயனில்லை யென்றும், பல வழிகளிலும் சமய பரிபாலனம் செய்ய முயலுதல் வேண்டும் என்றும், சைவ சமயாபிமானிகளின் கடமைகள் இன்னவை யென விளக்கி உபந்நியாசங்கள் செய்யவேண்டும் என்றும் தெரிவித்தனர். ஷை பிள்ளையவர்கள் இவருக்குப் பதில் எழுதி சைவசமயிகளின் கடமையை விளக்கி ஒருவியாசம் எழுதி யனுப்பும்படி கேட்டனர். பத்திரிகாசிரியர் சென்னைக்கு வந்ததும், அவ் வியாசத்தை மிக விரிவாயெழுதி டெம்மி 8 பக்க அளவில் 20 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமாக 1000 பிரதி அச்சிட்டு, இராமநாதபுரத்தில் கூடிய மகாசமாஜத்து ஐந்தாவது வருடாந்தக் கூட்டத்தில் அரங்கேற்றினர். 1912வரு ஷை சமாஜத்தின் காரியதரிசியாயிருந்து சென்னை விக்டோரிய பப்ளிக் ஹால் என்னும் நகர மகாமண்டபத்தில் மகா சமாஜத்தின் 6 - வது வருடாந்தக் கூட்

டத்தை மிகச்சிறப்பாய் நடத்துவித்தனர். சைவசித்தாந்த மகா சமாஜத்தின் காரியங்களை நடத்தற்குச் சுமார் 3 வருடம் வரையில் திருக்கூட்டச் சபாமண்டபத்தில் இடங்கொடுத்து ஆதரித்தனர். இரண்டு வருடம்வரையில் பொக்கிஷதாரராயிருந்து சமாஜத்து அத்தியக்ஷர்கள் சிலர் காட்டிய குரோதத்தாலும், ஒற்றுமையின் மையாலும் ஷை சமாஜத்தினின்றும் நீங்கி, தாமே பத்திரிகாசிரிய ராகவும், வியாசங்கள் எழுதுவது முதல் எல்லா வேலைகளையும் செய்பவராகவும் இருந்துகொண்டு சைவம் என்னும் இப்பத்திரி கையை வெளியிட்டு வருகின்றனர். இப்போது வைதிக சைவ அச்சுக்கூடம் எனப் பெயரிய அச்சுக்கூடமும் தாபித்து நடத்து கின்றனர்.

---

## சங்கிராந்திவிரத வரலாறு.

இது யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும் "இந்து சாதனம்" என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்து இங்கு வெளியிடப்பட்டது.

---

சூரியன் வருடந்தோறும் வடபாதிக் கோளத்தைச்சார்ந்த மகரமுதல் மிதுனமீறுகிய ஆறு இராசிகளில் ஆறுமாதம் சஞ்சரிக் கிறபடியால் அதற்கு உத்தராயணம் (வடசஞ்சாரம்) என்று பெயர். தென்பாதிக் கோளத்தைச் சர்ந்த கடகமுதல் தனுவீறுகிய ஆறு இராசிகளில் ஆறுமாதஞ் சஞ்சரிக்கிறபடியால் அதற்குத் தெட்சணு யனம் (தென் சஞ்சாரம்) என்று பெயர். இரண்டயனங்களும் தேவர்களுக்கு முறையே பகலும் இரவும் கூடிய ஒருநாளாகின்றது. எனவே சூரியன் தனுவில் சஞ்சரிக்கிற காலமாகிய மார்கழி மாசம் தேவர்களுக்கு விடியற்கால முகூர்த்தமாகின்றது. ஆதலால் இந்த மாதமுழுதும் விடியற்காலத்தில் தீர்த்தமாடிக் கடவுளைப் பூசித்துத் தோத்திரஞ் செய்வது மேலாகிய புண்ணியம். தட்சணுயனத்தில் ஆறுமாதம் மானுடரை மூதேவி ரூபமாயும், பசுக்களைப் புலிரூப மாயும் பீடித்துக்கொண்டிருந்த அந்தப் பீடை முடியுங்காலம் சூரி யன் வடபுறத்திற் திரும்பும் நாளாகிய தைமாதம் முதல்தேதி யாத லால் அத்தினத்தில் எல்லாரும் சூரியன் இந்திரன் பிரமா விஷ்ணு உருத்திரன் சதாசிவன் முதலான தேவர்களைப் பூசித்து லவணமில் லாமற் பாற்பொங்கல் நிவேதனஞ்செய்து பிதிர்தேவர்களுக்குத் திலதர்ப்பணஞ் செய்து வேதத்திற் சொல்லப்பட்ட ஆறு தொழி லையும் எடுத்தாளுகின்ற சற்பிராமணருக்கு இயன்றமட்டும் கோ

தானம் முதலிய தானங்கள் கொடுக்கவேண்டியது. அந்த ஆறு மாதகாலமும் நாடும் வீடும் மூதேவி யடைந்திருந்தபடியால் அவற்றைச் சுத்திசெய்து பழம்பாண்டங்களைக் கழித்துவிட்டுப் புதுப் பாண்டங்களில் சங்கிராந்தி தினம் அமுதுசெய்தல்வேண்டும். அல்லாமலும் மூதேவியால் பீடிக்கப்பட்ட அந்தத் தெட்சணாயன காலத்தில் புலிகளால் பசுக்களடைந்த பீடை நீங்கும் பாவனையாக மறுநாட் சாயங்காலம் பசுக்களை முழுக்காட்டி அலங்காரம்பண்ணி அவைகளை முன்னே நடக்கப்பண்ணி பின்னே சுவாமியை எழுந்தருளப்பண்ணவேண்டியது. இதன் பயன் சகல சம்பத்துண்டாதல்.

இங்ஙனம்,

வட்டுநகர் வித்துவான் - மு. ஆறுமுகம் பிள்ளை.

---

## கடவுள் நம்மை யேன் உண்டாக்கினார் ?

சிலர் கடவுள் ஒருவர் இருந்தால் அவர் தம்மட்டில் இருக்கலாகாதா? நம்மையேன் உண்டாக்கவேண்டும்? நம்மையுண்டாக்கினாரெனில், நாம் பாவம்செய்து துன்பம் அனுபவியாதபடி ஏன் உண்டாக்கவில்லை? அவர் நம்மை உண்டாக்காதிருந்தால் நாம் பாவஞ் செய்யவும் அதனால் துன்பம் அனுபவிக்கவும் நேரிடாதன்றோ? அவர் நம்மை உண்டாக்கும்போதே நாம் பாவஞ்செய்வோமென்று அவருக்குத் தெரியாதா? என்பன வாதியாய கேள்விகளைக் கேட்கிறார்கள். சைவசமயிகள் தவிர மற்றவர்களெல்லாம் இக்கேள்விகளுக்குத் திருப்திகரமான சமாதானங் கூறமாட்டாதவர்களா யிருக்கிறார்கள். இவர்களுள் கிறிஸ்தவர்கள் "கடவுள் உயிர்களைப் பலவாறாக உண்டாக்குவது அவர் விருப்பத்தைப் பொறுத்தது. தேவனுடைய செயலில் குறைகூற நமக்கு அதிகாரமில்லை" என்கிறார்கள். சிலர் "கடவுள் தம்மை வணங்கும்படி நம்மைப்படைத்தார்" என்கிறார்கள். சிலர் "உயிர்களைப் படைத்தலும் அழித்தலும் கடவுளுக்கு ஒரு விளையாட்டு" என்கிறார்கள். ஏகான்மவாதிகள் "கடவுள் உயிர்களைப் படைத்ததேயில்லை. அவரே உயிர்களாயிருக்கிறார். அவரும் நாமும் வெவ்வேறு பொருள்களன்று" என்கிறார்கள். சைவசமயிகளாகிய நாம் "கடவுள் உயிர்களை ஒருபோதும் உண்டாக்கினதில்லை. கடவுள் என்று உண்டோ, அன்றே அளவுபடாத உயிர்களும் உண்டு" என்கிறோம். ஆதலால் மற்றவர்கள் கூறுவன வெல்லாம் எம்மட்டில் உண்மை

யாகும் என்பதைக்காட்டி, அவைகளைப் பூர்வபக்கப்படுத்தி சைவ சமயிகளாகிய நாம் கூறும் கூற்றினை நன்குவிளக்கிச் சித்தாந்தம் செய்வோம். (இவ்வாறே பிறசமயிகள் கூறும் பதி பசு பாசங்களின் இலக்கணங்களிலுள்ள குற்றங்களை எடுத்துக்காட்டி நியாயவாயிலாக அவைகளைப் பூர்வபக்கப்படுத்திச் சைவ உண்மைகள் சித்தாந்தம் செய்யப்பட்டிருத்தலினல் சைவம் சித்தாந்தம் என வழங்கப் பெற்றது.)

"இல்லது வாராது, உள்ளது போகாது" என்பது தருக்க நூற்றுணிபு. ஆதலால், முன் இல்லாத உயிர்கள் பின் ஒரு காலத்தில் உண்டாயிற்று என்பது இத்தருக்கநூற் றுணிபோடு முரணும். கிறிஸ்தவர்கள் புண்ணியஞ்செய்த உயிர்கள் நித்திய இன்பத்தையும் பாவஞ்செய்த உயிர்கள் நித்திய நரகத்தையும் அனுபவிக்கும் என்று கூறி, உயிர்கள் அழியாமலிருக்குமென்பதைமாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறார்கள். உயிர்களுக்கு அழிவில்லையாயின் உற்பத்தியும் இல்லாதிருக்கவேண்டும். கடவுள் சர்வவல்லமை யுடையவராதலால், அவர் முன் இல்லாத உயிர்களை உண்டாக்குதலுங் கூடுமெனின், ஏன் உண்டாக்கினர் என்பனவாதியாய கேள்விகள் நிகழ்ந்து, அவர் விருப்பு, வெறுப்பு, பக்ஷபாதம் முதலிய குற்றங்களை யுடையவர் என்று சாதிக்கவேண்டி வரும். தம்மை வணங்கவேண்டி உயிர்களை யுண்டாக்கினரென்பதும், உயிர்களை யுண்டாக்குவது அவருக்கொரு விளையாட்டு என்பதும் அவர் முற்கூறிய குற்றங்களை யுடையவரென்பதை நிலைநாட்டும். உயிர்கள் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையனவாய் அஞ்ஞானத்தில் மூழ்கிச் சுகதுக்கங்களில் அழுந்திப் பலவேறுவகையாயிருத்தலினல், சச்சிதானந்த சொரூபமான தனிப் பரம்பொருளாகிய கடவுளே உயிர்களாயிருக்கிறார் என்பதும் பொருந்தாது. ஆதலால், உயிர்கள் எக்காலத்தும் உண்டாக்கப்படாமல் கடவுளைப்போலவே என்றும் உள்ளன என்று சாதிக்கப்படும். இதுவே வேதாகமங்களின் துணிபுமாம். இதனை வற்புறுத்தவே, தாயுமானசுவாமிகள் "அருளுடைய பரமென்றே வன்றுதானே யானுளனென்றும் எனக்கே யாணவாதி— பெருகுவினைக் கட்டென்று மென்னுற்கட்டிப் பேசியதன்றே யருணுல் பேசிற்றன்றே" என்று அருளிச்செய்தனர்.

ஆனல் வேதாகமங்கள் சிவபெருமான் சிருட்டிமுதலிய பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றார் எனவும், அவர் இச்சா ஞானக் கிரியைகளை யுடையவர் எனவும் கூறுவதின் கருத்து யாதோவெனில்,

கூறுவோம். சிவபெருமான் உயிர்களுக்குச் சரீரங்களைக் கொடுத்தலை சிருட்டியென்று சொல்லப்படும். உயிர்களுக்கு அவர் ஏன் சரீரங்களைக் கொடுத்தல்வேண்டும் என்னில், உயிர்களுக்கு மூன்று அவத்தைகள் என்று சொல்லப்படும் மூன்று நிலைகள் உண்டு. அவை கேவலம், சகலம், சுத்தம் என்னப்படும். அவற்றுள் கேவலாவத்தை யெனப்படுவது உயிர்கள் (தாயின் கருப்பாசயத்தில் கட்டுப்பட்டு கண் செவி முதலிய அவயவங்கள் இன்னுந்தோன்றப் பெறுமல் அறிவும் செயலுமின்றிக் கிடக்கும் பிண்டரூபமாகிய சிசுவைப்போல்) ஆணவம் என்னும் மலத்தாற் கட்டுப்பட்டு அறிவும் செயலுமிழந்து கிடக்கும் நிலை. சகலாவத்தை யெனப்படுவது (தன் கருப்பாசயத்தில் கட்டுண்டிருந்த சிசுவைத் தாயானவள் பெற்று வளர்த்து அறிவை விளக்குவதுபோல்) இறைவர் திருவருளால் உயிர்கள் பிறவிகளெடுத்து அறிவும் செயலும் விளங்கப் பெறும் நிலை. சுத்தாவத்தை யெனப்படுவது அவ்வாறு அறிவு முதிரப்பெற்ற உயிர்கள் அவ்வறிவு முதிர்ச்சியினுல் ஆணவமல பந்தத்தினின்றும் நீங்கிச் சிவத்தோடு இரண்டறக்கூடி இன்பமார்ந்திருக்கும் நிலை. இவைகள் "சைவம் முதல் மலர்" 105-106-107-வது பக்கங்களில் முன்னமே நன்கு விளக்கப்பட்டன.

இதனுல் உயிர்கள் ஆணவமலக்கட்டினின்றும் நீங்கித் தன்திருவடி யின்பத்தை யடைதற்பொருட்டே சிவபெருமான் அவைகளுக்குச் சரீரங்களைக் கொடுத்தருளுகின்றனர் என்பது பெறப்பட்டது. இதனை

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ

நீக்கிமலக் கட்டறுத்து நேரே வெளியி லெம்மைத்
தூக்கிவைக்குந் தாளைத் தொழுதிடுநா ளெந்நாளோ

என்னும் தாயுமானசுவாமிகள் திருவாக்குகளால் உணர்க.

ஆனல், உயிர்களுக்கு ஆணவமலம் எப்படி உண்டாயிற்று எனில், அதுவும் செம்பு உள்ளபோதே அதனேடு களிம்பும் இருப்பதுபோலவும், நெல் உள்ளவன்றே உமியும் தவிடும் இருப்பதுபோலவும் ஆன்மா உள்ளவன்றே அதனேடு இருப்பதாம். இதனை முன் உதகரித்த தாயுமானவர் திருவாக்கே வலியுறுத்தும்.

ஆனல் ஆணவமலத்தால் வருந்தும் ஆன்மாக்களுக்குச் சிவபெருமான் பிறவியைக்கொடுக்க விரும்பினுரெனில் விருப்பு வெறுப்புடைமை யென்னுங் குற்றம் அவர்பாற் சாராதோ வெனின்,

சாராது. கடவுள் கொள்ளும் விருப்பு வெறுப்புகள் ஆன்மாக்கள் கொள்ளும் விருப்பு வெறுப்புகளைப்போல் பாசகாரியம் அன்று. அவை அருட்செயலாம். சிவபெருமானிடத்தில் அருள் என்னப் படும் சத்தி யொன்றிருக்கிறது. அவ்வருட்சத்தியால் உலகம் காரி யப்பட்டுவருகிறது. அவ்வருட்சத்தியானது ஆன்மாக்களை ஆணவ மலத்தினின்றும் விடுவித்து இறைவனுருடைய திருவடிகளிற் சேர்க் கத் திருவுளங்கொண்டபோது இச்சாசத்தி என்னப்பட்டது. ஆன் மாக்களை அவ்வாறு காத்தற்கு அறிவு எழுந்தபோது ஞானசத்தி யென்னப்பட்டது. அவைகளை யவ்வாறு காத்தல்வேண்டி சிருட் டியாதி தொழில்களைச் செய்யும் அவசரத்தில் கிரியாசத்தி யென்னப் பட்டது. இவ்வாறு சிவபெருமானுடைய அருட்சத்தியொன்றே க்ரியவேறுபாட்டால் இச்சா ஞானக் கிரியாசத்திகளாகச் சொல் லப்பட்டது. ஆதலால் விருப்பு வெறுப்புடைமை யென்னுங் குற்றம் அவர்பாற் சாராது.

### சிவப்பிரகாசம்.

பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானங் கிரியைபர போக ரூபந்
தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்க டாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்றாய்
விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்று ளாடல் காணு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

அன்றியும் சூரியன் வாளாவிருக்கவும், அதனிடத்திலுள்ள வெப்பத்தால் தாமரை யரும்புவதும், மலர்வதும், வாடுவதுமா யிருப்பதுபோல், சிவபெருமான் அருட்சத்தி விசேடத்தால் உயிர் களுக்குச் சரீரம் உண்டாவது அழிவது முதலிய பிரபஞ்சகாரியங் கள் யாவும் நடைபெறும். நடைபெற்றும் சிவபெருமான் அவற் றோடு தொடர்புபடாமல் தாக்கற்று நிற்பர்.

### தாயுமானவர்பாடல்.

ஆக்கியளித்துத் துடைக்குந் - தொழி லத்தனைவைத்து மெள்ளத் தனையேனுந், தாக்கறநிற்குஞ் சமர்த்தன் உள்ள சாக்ஷியைச் சிந்திக்கத் தக்கது தோழி - சங்கர சங்கர சம்பு.

இக்காரணங்களால் சிவபெருமான் உயிர்களைப் படைத்துக் காத்து அழிக்கின்றார் என்பது சூரியன் தாமரையை அரும்பவும், மலரவும், வாடவும் செய்கிறான் என்பதுபோலாம். புற்பூண்டுகள் தாம் முளைத்து வளர்வதற்குச் சூரியனுடைய வெப்பத்தை நாடுவது

எப்படி அவசியமோ அப்படியே உயிர்கள் பிறவிகளெடுத்தற்கும் ஆணவமலவலியழிதற்கும் சிவபெருமான் திருவருளை நாடுவது அவசியமாம். இதுபற்றியே சைவநூல்கள் சிவபெருமான் தம்மைவணங்கி யுய்யுமாறு உயிர்களைச் சிருட்டிக்கிறார் என்று கூறும். அன்றியும் அவர் அளவிலாற்றலுடையவராகவும், அவர் சந்நிதிமாத்திரத்திலேயே சகலபிரபஞ்சமும் தோன்றி நின்று அழிதலினாலும் அவர் அவ்வாறு செய்தல் விளையாட்டு என்றும் சொல்லப்படும்.

## ஆயுள் சந்தா.

சிறுகனூர் இந்து சமரசநன்னிலைச் சங்கம் ஸ்ரீமத் சச்சிதானந்த சிவஞான மௌனகுரு உருத்திரமூர்த்தியவர்கள் பத்திரிகையின் ஆயுள்சந்தா, ரூபா பத்து, அனுப்பப்பெற்றோம். (ப-ர்.)

## பிரார்த்தனை.

இதுவரையில் வெளிவந்த எமது சரித்திரத்தால் யாம் எவ்வளவு சுயநலப் பரித்தியாகஞ் செய்துகொண்டு எவ்வளவு அரிய காரியங்களைச் செய்துகொண்டு வருகின்றோம் என்பது யாவருக்கும் வெள்ளிடைமலையென விளங்கும். கிறிஸ்தவருள் ஒருவர் இவ்வாறு பாடுபடுவார் இருந்தால் அவருக்கு அவர்கள் எவ்வளவோ துணையாயிருப்பார்கள். அவரைக்கொண்டு எவ்வளவோ காரியங்களை நடத்திக்கொள்வார்கள். அவரால் இத்தகைய அரிய பத்திரிகையொன்று வெளியிடப்படுமானால் அது இலட்சக் கணக்காகப் பரவுமாறு செய்வார்கள். கிறிஸ்தவர்கள் அவைகளைத் தாங்கள் படிக்காவிட்டாலும் அதின் அபிவிருத்தியின்பொருட்டும், அதை வெளியிடுவோரை உற்சாகப்படுத்தும் பொருட்டு மேனும் எவ்வளவு விலையானாலும் கொடுத்து வாங்குவார்கள். நம்மவர்களோவெனில், இத்தகைய சபைகளையாவது, பத்திரிகைகளையாவது, சைவாபிமானிகளையாவது, ஆதரிக்கமுன் வருவதில்லை. இவர்களுக்கு இவைகளை யாதரிப்பது சிவபுண்ணியமாகவும் தங்கள் கடமையாகவும் தோன்றுகிறதில்லை. இதுபற்றியே கிறிஸ்து சமயம் உலகடங்கலும் பரவிக்கொண்டிருக்கவும், நம்முடைய சைவசமயம் உள்ளூரிலும் நிலைகுலைந்திருக்கிறது. ஆதலால் சிவநேயச் செல்வர்களே, சைவச் சீமான்களே, அன்புகூர்ந்து சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தை யாதரிக்க முற்படுங்கள். இப்பத்திரிகையைத் திருநீறிடும் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கச்செய்து பதினாயிரக் கணக்காகப் பரவுமாறு செய்யுங்கள் "நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க. இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க."